

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (6.10.2025) தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளி மாணவர்களின் பயன்பாட்டிற்காக 3 கோடியே 62 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் செலவில் 23 வாகனங்கள் மற்றும் பெருநிறுவன சமூகப் பொறுப்பு (சி.எஸ்.ஆர்.) நிதியிலிருந்து 3 வாகனங்கள் என மொத்தம் 26 வாகனங்கள் மற்றும் பழங்குடியின மக்களின் மருத்துவப் பயன்பாட்டிற்காக 5 கோடியே 78 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாய் செலவில் 25 அவசரகால ஊர்திகள், 4 கோடி ரூபாய் செலவில் 20 நடமாடும் மருத்துவ ஊர்திகள் ஆகியவற்றின் பயன்பாட்டினை கொடியசைத்து தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எ.வ. வேலு, மருத்துவர் மா. மதிவேந்தன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## 10 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்பு!

சென்னை, அக். 7–

தமிழ்நாட்டில் வெப்பச்சலனம், வளிமண்டலத்தில் நிலவும் கீழடுக்கு சுழற்சியால் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக நீலகிரி, கோவை, திண்டுக்கல், தேனி, மதுரை, சிவகங்கை, விருதுநகர், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி ஆகிய 10 மாவட்டங்களில் இன்று கனமழைக்கு வாய்ப்புள்ளதாகவும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும், கடலூர், கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை, விழுப்புரம் ஆகிய 4 மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் நாளை கனமழை பெய்யக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. வரும் 8 மற்றும் 9ம் தேதிகளில் தமிழ்நாட்டில் பரவராக மழை பெய்யக் கூடும் என்றும் வானிலை ஆய்வும் தெரிவித்துள்ளது.

## வாட்ஸ் அப்பில் வந்த செய்தி !




### திண்டிவனத்தில்

# உலக ஒற்றுமையை வலியுறுத்தி - மாரத்தான் போட்டி!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பரிசு வழங்கினார்!

திண்டிவனம், அக். 7–

உலக ஒற்றுமையை வலியுறுத்தி திண்டிவனத்தில் நடைபெற்ற ஓட்டபந்தியத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு 1 லட்சத்தி 85 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பரிசுகளை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்.

விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் வள்ளலாரின் பிறந்த நாளை முன்னிட்டு ஆர்.பி. மிஷன் பவுண்டேஷன் நிறுவனர் ராஜேந்திர பிரசாத், பொதுச் செயலாளர் ராஜேஸ்வரி ஆகியோர் ஏற்பாட்டில் உலக ஒற்றுமை மாரத்தான் ஓட்டம் 2025 போட்டி நடைபெற்றது.

திண்டிவனம் அண்ணா அரசு பொறியியல் கல்லூரி வளாகம் எதிரில் நடைபெற்ற உலக ஒற்றுமை மாரத்தான் ஓட்டப்பந்தயத்தை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மராத்தான் ஓட்டப்பந்தயத்தில் 15 வயதிற்கு மேற்பட்டோர் கலந்து கொண்ட பொது பிரிவில் சுமார் 1500 க்கும் மேற்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் பங்கேற்றனர்.

10 வயது முதல் 15 வயதுடைய பள்ளி மாணவ, மாணவிகள் 500க்கும் மேற்பட்டோர் ஓட்டப்பந்தயத்தில் கலந்து கொண்டனர்.

பள்ளி மாணவ, மாணவிகளுக்கு 1 கிலோமீட்டர் தூரமும், பொது பிரிவினருக்கு ஆறு கிலோமீட்டர் தூரம் ஓட்டப்பந்தியம் நடைபெற்றது.

ஓட்டப்பந்தயத்தில் தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ஓட்டப்பந்தயத்தில் பொதுத் பிரிவில் உத்திர பிரதேஷ் மாநிலத்தைச் சேர்ந்த தனிஷ் முதல் இடத்தையும், மும்பையைச் சேர்ந்த அசுதேஷ் இரண்டாம் இடத்தையும், சந்தோஷ் மூன்றாம் இடத்தையும் பிடித்தனர்.

இதேபோல் சிறுவர்கள் கலந்து கொண்ட ஓட்டப்பந்தயத்தில் சென்னை அடையாரைச் சேர்ந்த கருண் என்பவர் முதலிடத்தையும், விழுப்புரம் மாவட்டம் மயிலம் ஒன்றியம் கொள்ளார் அரிஷ் குமார் இரண்டாம் இடத்தையும், டி.கேணிப்பட்டு லிங்கேஷ்வரன் மூன்றாம் இடத்தையும் பிடித்தனர்.

மரத்தான் ஓட்டப்பந்தயத்தில் முதல் முதல் மூன்று இடம்பிடித்தவர்களுக்கு பரிசுகள் வழங்கும் நிகழ்ச்சிகல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்பாக விருந்தினராக கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றி முதல் பரிசாக 50,000, இரண்டாம் பரிசாக 40,000, மூன்றாம் பரிசாக 30.000, சிறுவர்களுக்கான முதல் பரிசு 5000, இரண்டாம் பரிசு 4000,மூன்றாம் பரிசாக 3000 ரூபாய் வழங்கினார். பொது பிரிவில் 4வது முதல் 25 வது வரை இடம்பிடித்து வெற்றி பெற்றவர்களுக்கு தலா ரூபாய் 2500 பரிசுகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் செங்கல்பட்டு மாவட்டம் புனித தோமையர்மலை ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவர் சங்கீதா பாரதிராஜா, திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், மாவட்ட தொண்டரணி தலைவர் பிர்லா செல்வம், அப்போலோகம் யூனிகேஷன் கல்லூரியின் நிறுவனர் முரளி கண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்க (கடலூர் மண்டலம்) நிர்வாகிகள்

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் (கடலூர் மண்டலம்) (பதிவு எண். 218/CDR, பேரவை இணைப்பு எண். 1002) பணிமனைகள் மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தல் மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் **சி.கருணாநிதி** அவர்களை ஆணையாளராகக் கொண்டு நடத்தப்பட்டதில் கீழ்க்கண்டவர்கள் மத்திய சங்க நிர்வாகிகளாக ஒருமனதாக போட்டியின்றி தேர்வு பெற்றுள்ளனர்.

**மத்திய சங்க நிர்வாகிகள்**

| | |
|---|---|
| தலைவர் | – P. பிரேம்குமார் (DR 4815, திட்டக்குடி) |
| துணைத் தலைவர்கள் | – 1) P. ராஜராஜன் (TR1242, காட்டுமன்னார்கோயில்) |
| | 2) M. விஸ்வநாதன் (DR3000, விருத்தாசலம்–I) |
| பொதுச்செயலாளர் | – தங்க ஆனந்தன் |
| துணைப்பொதுச்செயலாளர்கள் | –1) M. ஞானவேல் (DR 5736, கடலூர்–II) |
| | 2) K. தில்லைகோவிந்தன் (DR4488, நெய்வேலி) |
| பொருளாளர் | – D. செந்தில்மோகன் (DR 2988, சிதம்பரம்–II) |
| தலைமை நிலையச் செயலாளர் | –R. முரளிதரன் (CR4791, பண்ருட்டி) |
| அமைப்புச் செயலாளர் | – 1) G. பாலவினாயகம் (DR 4750, வடலூர்) |
| | 2) P. சூரியமூர்த்தி (DR 5363, பண்ருட்டி) |
| பிரச்சார செயலாளர் | – M. ரெத்தினவேலு (CR 4515, விருத்தாசலம்–I) |
| இணைச்செயலாளர்கள் | – 1) C. பொன்னிவளவன் (DR 5021, விருதாசலம்–II) |
| | 2) E. வீரபத்திரன் (DR 4252, பண்ருட்டி) |
| துணைச்செயலாளர்கள் | – 1) T. ராஜன் (DR 4621, கடலூர்–II) |
| | 2) N. சுரேஷ் (DR 4566, விருத்தாசலம்–II ) |
| | 3) V. மந்திரிகுமார் (DR 4765, நெய்வேலி) |

இடம்: கலைஞரகம்
நாள்: 06.10.2025

**மு.சண்முகம், Ex.MP**
பொதுச்செயலாளர்
தொ.மு.ச. பேரவை




விழுப்புரம் மாவட்டம் திண்டிவனத்தில் வள்ளலார் பிறந்தநாளை முன்னிட்டு உலக ஒற்றுமையை வலியுறுத்தி நடைபெற்ற மாரத்தான் ஓட்டப்பந்தயத்தை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கொடியசைத்து தொடங்கி வைத்து போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு 1 லட்சத்தி 85 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பரிசுகளை வழங்கினார். உடன் புனித தோமையர்மலை ஊராட்சி ஒன்றியத்தின் பெருந்தலைவர் சங்கீதா பாரதிராஜா, திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், ஆர்.பி.மிஷன் பவுண்டேஷன் நிறுவனர் ராஜேந்திர பிரசாத், பொதுச் செயலாளர் ராஜேஸ்வரி ஆகியோர் உள்ளனர்.

### அமைச்சர் மனோ தங்கராஜ் பங்கேற்பு!

# மும்பையில் தி.மு.க. நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## அலிஷேக் மீரான் தலைமை!

*மும்பை, அக். 7 -*

*மும்பை புறநகர் மாநில தி.மு.க. சார்பாக நிர்வாகிகள் கிளைக் கழகச் செயலாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் பாண்டுப் பிரைட் உயர்நிலைப் பள்ளியில் புறநகர் மாநில பொறுப்பாளர் அலிஷேக் மீரான் தலைமையில் பொறுப்பு குழு உறுப்பினர் ஜேம்ஸ் தேவதாசன் இளைஞர் அணி அமைப்பாளர் ந. வசந்த குமார் முன்னிலையில் நடைபெற்றது.*

*முன்னதாக முதலமைச்சர் அவர்களால் 8 ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் மன்றத்தில் திறக்கப்பட்ட அய்யன் திருவள்ளுவர் சிலைக்கு அமைச்சர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் .*

*பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் தி.மு.க. பொறுப்புக் குழு உறுப்பினர்கள் வதிலை பிரதாபன், இளங்கோ அப்பாதுரை, மெஹபூப் பாட்ஷா ஜெய்னுல் ஆப்தின் வீரை சோபாபு சிவக்குமார் சுந்தர்ராஜ், பேலஸ் துரை, மும்பை மாநகர பொறுப்பாளர் ஜேசுராஜ் , நிர்வாகிகள் அன்பழகன் பொற்கோ, நீதி துரை, ஸ்டீபன், மதியழகன், முலுண்ட் பெருமாள், தானா பாலமுருகன் லத்திப் பாய், பிவண்டி முஸ்ட்டாக் பாய், வாசி முத்து, வாசி பழனி, இலக்கிய அணிதமிழ் நேசன், ஆரே காலனி கோவிந்தராஜ் பாண்டுப் வெங்கடேசன் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.*

*அமைச்சர் தனது உரையில் திராவிட மாடல் அரசை திறம்பட நடத்தி வரும் முதல் அமைச்சர் தளபதி அவர்கள் தமிழ் நாட்டில் கல்வி, மருத்துவம், சுகாதாரம், உட்கட்டமைப்பு, விவசாயம், தொழில் துறையில் செய்து வரும் அரிய சேவைகள் பற்றியும் வெளி மாநில, வெளி நாட்டில் வாழும் தமிழர்களுக்காக கொண்டு வந்துள்ள நல்ல திட்டங்கள் பற்றியும் எடுத்து உரைத்தார்.*

### ரூ.5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாயில் - இராஜபாளையம் தொகுதியில்

# ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ள குழந்தைகளுக்கு புத்தாடைகள்!

## எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ. 9வது முறையாக வழங்கினார்!

*இராஜபாளையம், அக். 7-*

*இராஜபாளையம் தொகுதியில் 05.10.2025 அன்று காலை 9 மணியளவில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டும், துணை முதலமைச்சர் அவர்கள் 48 வது பிறந்த நாளை முன்னிட்டும் பொன்னகரத்தில் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம், மருதுநகரில் உள்ள Light of life குழந்தைகள் காப்பகம் மற்றும் சேத்தூரில் உள்ள அருளோதயம் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம் என 3 காப்பகத்தில் உள்ள 231 ஆதரவற்ற குழந்தைகளுக்கு தொடர்ந்து 8 வருடங்களாக தீபாவளிக்கு புத்தாடை வழங்குவது போல் தற்போதும் 9வது முறையாக அக்குழந்தைகளை இராஜபாளையம் ஆனந்தம் சில்க்ஸ் ஜவுளி கடைக்கு அழைத்து வந்து நமது எஸ்.தங்கப்பாண்டியன் எம்.எல்.ஏ. 5 மாத ஊதியத்திலிருந்து (ரூபாய் 5,25,000) குழந்தைகளுக்கு பிடித்தமான புத்தாடையை குழந்தைகளே பார்த்து பார்த்து மகிழ்ச்சியுடன் தேர்வு செய்து எடுத்தனர்.*

*இந்நிகழ்வில் குழந்தைகளுடன் பேசிய எம்.எல்.ஏ. தங்களது எதிர்காலத்தை சிறப்பானதாக மாற்றக் கூடிய சக்தி கல்விக்கு மட்டுமே உள்ளது, அக்கல்வியை அனைத்து குழந்தைகளுக்கும் சிறப்பாகவும் தரமாகவும் வழங்க நமது தமிழ்நாடு முதலமைச்சர் கல்வி உதவித்தொகை திட்டம், புதுமைப்பெண் திட்டம் மூலம் மாணவ, மாணவியர்களுக்கு மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டம், அரசு பள்ளியில் பயின்ற மாணவ, மாணவியர்களுக்கு மருத்துவப்படிப்பில் 7.5% இட ஒதுக்கீடு திட்டம் போன்ற சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்,*

*மேலும் தற்போது ஆதரவற்ற குழந்தைகளின் நலன்காக்க அன்புக்கரங்கள் திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார் அத்திட்டங்களை குழந்தைச்செல்வங் கள் பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.*

*மேலும் நாணயத்தின் இருபக்கங்கள் போல் முதலமைச்சர் அவர்களும் துணை முதலமைச்சர் அவர்களும் தமிழ் நாட்டை சிறப்பாக வழி நடத்தி வருகிறார்கள் எனக்கூறினார்.*

*மேலும் ஆதரவற்ற குழந்தைகளுக்கு முதலமைச்சர் அவர்களும் துணை முதலமைச்சர் அவர்களும் விருதுநகர் மாவட்டத்தின் அமைச்சர் பெருமக்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர்.இராமச்சந்திரன், தங்கம்தென்னரசு எம்.பி., இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினராகிய நானும் இராஜபாளையம் தொகுதி பொதுமக்களும் அன்றும் இன்றும் என்றும் உறுதுணையாக இருப்போம் என எம்.எல்.ஏ. கூறி வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார்,*

*அதனைத்தொடர்ந்து குழந்தைகள் அனைவரும் கவனமாக காப்பகத்திற்கு செல்லுமாறும் நீங்கள் ஆதரவற்ற குழந்தைகள் அல்ல அனைவரின் ஆதரவு பெற்ற குழந்தைகள் எனக் கூறி, தீபாவளி அன்று பட்டாசுகளை கவனமாக வெடித்து கொண்டாடுமாறு எம்.எல்.ஏ. அறிவுரையும் வழங்கினார்.*

*இந்நிகழ்ச்சியில் நகர செயலாளர்கள் ராமமூர்த்தி மணிகண்டராஜா பொதுக்குழு உறுப்பினர் கனகராஜ் சேத்தூர் சேர்மன் பாலசுப்பிரமணியன் நகர் கழக நிர்வாகிகள் பாரத்ராஜ் மாயாவிமுருகேசன் மற்றும் கவுன்சிலர்கள் கழக நிர்வாகிகள் குழந்தைச்செல்வங்கள் கலந்து கொண்டனர்.*



இராஜபாளையம் தொகுதியில் தீபாவளி பண்டிகை – துணை முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு பொன்னகரத்தில் உள்ள ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம், மருதுநகரில் உள்ள லைஆப் லைப் குழந்தைகள் காப்பகம் மற்றும் சேத்தூரில் உள்ள அருளோதயம் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகம் என 3 காப்பகத்தில் உள்ள 231 ஆதரவற்ற குழந்தைகளுக்கு 9 வது முறையாக இராஜபாளையம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.தங்கப்பாண்டியன் தனது 5 மாத ஊதியத்திலிருந்து (ரூபாய் 5,25,000) குழந்தைகளுக்கு பிடித்தமான புத்தாடையை குழந்தைகளே பார்த்து பார்த்து மகிழ்ச்சியுடன் தேர்வு செய்து எடுத்து கொடுத்தார். உடன் ராமமூர்த்தி, மணிகண்டராஜா, கனகராஜ், பாலசுப்பிரமணியன், பாரத்ராஜ், மாயாவி முருகேசன் மற்றும் கவுன்சிலர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.